DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

CC.No.68/2025

Deposition of witness: LW7/PW6

| | | | |
|---|---|---|---|
| Name | முருகன் | Taluk | |
| Father 's Name | கோபால் | Village | |
| Age | 60 | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **04.03.2026.** | | | |

(Accused 1 absent, A2 present)

சாட்சியை முத்தாண்டிக்குப்பம் காவல் நிலைய காவலர் திருமதி. ராஜலட்சுமி HC 1949அவர்கள் அடையாளம் காட்டினார்.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது மருங்கூர் காலனியில் வசித்து, விவசாய வேலை செய்து வருகிறேன். பட்டியல் சாட்சி முரசு என்பவரை தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் என் கையொப்பம் இல்லை. மேற்படி பார்வை மகசரில் உள்ள சாட்சி கையொப்பங்கள் யாருடையது என்று எனக்கு தெரியாது. இவ்வழக்கு சம்மந்தமாகவும், பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் ஆவணம் சம்மந்தமாகவும் எந்த விவரமும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

1. ஆஜர் எதிரி எனது ஊரைச் சேர்ந்தவர் என்ற வகையில் எனக்கு பழக்கமானவர் என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் நான் போலிசார் விசாரணையின்போது 04.03.2024 அன்று காலை 06.00 மணியளவில் முத்தாண்டிக்குப்பம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் என் முன்பும், முரசு முன்பும் இவ்வழக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரிவரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தார்கள் என்றும், மேற்படி பார்வை மகசரில் நாங்கள் இருவரும் சாட்சி கையொப்பங்கள் செய்தோம் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சொல்லிவிட்டு ஆஜர் எதிரி பழக்கமானவர்கள் என்பதால், அவரை வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக அரசு தரப்பிலிருந்து விலகி பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை– இல்லை.**

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

CC.No.68/2025

Deposition of Witness : Additional witness/PW7

| | | | |
|---|---|---|---|
| Name | கலியமூர்த்தி, சிறப்பு உதவி ஆய்வாளர் | Taluk | |
| Father 's Name | சின்னதம்பி | Village | |
| Age | 57 | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **04.03.2026.** | | | |

(Accused 1 absent, A2 present)

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை:</u>**

**1.** நான் தற்போது முத்தாண்டிக்குப்பம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். இவ்வழக்கில் புகார் மனு பெற்று, நிலைய மனு ரசீது பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, இவ்வழக்கில் புலன் விசாரணை மேற்கொண்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்த உதவி ஆய்வாளர் செல்வராஜ் அவர்களின் கையொப்பம் மற்றும் கையெழுத்து எனக்கு நன்கு பரிட்சையம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. உதவி ஆய்வாளர் செல்வராஜ் முத்தாண்டிக்குப்பம் காவல் நிலையத்தில் கடந்த 03.03.2024 அன்று, சுமார் 17.00 மணியளவில் நிலைய பொறுப்பில் இருந்தபோது, ஏற்கனவே கடந்த 01.03.2024 அன்று, பகல் 12.00 மணியளவில் நடேசன் மகன் மணி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, நிலைய மனு ரசீது 135/2024 பதிவு செய்து வைத்திருந்ததை பரிசீலனை செய்து, நிலைய குற்ற எண்.64/2024 இ.த.ச. பிரிவுகள் 294(b), 352, 324-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, அதனுடன் அசல் புகார் மனுவையும் இணைத்து சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். **(மேற்படி புகார் மனு, நிலைய மனு ரசீது மற்றும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ-2, அ.சா.ஆ-3 மற்றும் அ.சா.ஆ-4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. பின்னிட்டு, உதவி ஆய்வாளர் செல்வராஜ் வழக்கு கோப்பினை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, 04.03.2024 அன்று காலை சுமார் 06.00 மணியளவில் சம்பவயிடம் சென்று, சாட்சிகள் முரசு, முருகன் ஆகியோர்கள் முன்பு சம்பவயிடத்தை பார்வையிட்டு, மாதிரி வரைபடம் வரைந்து, பார்வை மகசர் தயார் செய்து, பார்வை மகசரில் மேற்சொன்ன சாட்சிகளிடம் சாட்சி கையொப்பம் பெற்று, அவர்களை விசாரணை செய்து, தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(மேற்படி மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் முறையே அ.சா.ஆ5 மற்றும் அ.சா.ஆ6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மேலும்,

இவ்வழக்கின் புகார்தாரரும், காயம்பட்ட நபருமான மணி என்பவரையும், மேலும் பாதிக்கப்பட்ட நபரான குப்புசாமி என்பவரையும், கண்ணுற்ற சாட்சிகள் பிரவீன், ரமேஷ் ஆகியோர்களையும், சாட்சி அன்பரசு என்பவரையும் 04.03.2024 அன்று விசாரணை செய்து, தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

4. மேற்படி சாட்சிகளின் விசாரணையிலிருந்து வழக்கு சம்பவம் உண்மையென தெரியவந்ததில், வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளான அவினேஷ், சிவலோகநாதன் ஆகியோர்களை தேடியதில் எதிரிகள் இருவரும் சமூகம் நீதிமன்றத்தில் கடந்த 11.03.2024 அன்று, தன்னிச்சையாக ஆஜராகி, Crl.M.P.No.1757/2024 என்ற மனுவின் மூலம் பிணை பெற்றதால், உதவி ஆய்வாளர் அவர்களை கைது செய்யவில்லை.

5. வழக்கு சம்பவத்தில் காயம்பட்ட மணி என்பவருக்கு சிகிச்சை அளித்த பண்ருட்டி அரசு மருத்துவமனை மருத்துவர் ஷாஜகான் என்பவரை 13.05.2023 அன்று விசாரணை செய்து, மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று வழங்கிய காயச்சான்றை பெற்று, வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(மேற்படி விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ–7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

6. இத்துடன் உதவி ஆய்வாளர் வழக்கின் புலன் விசாரணையை முடித்து 1வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324 ன்படியும், 2வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 352 ன்படியும், 13.05.2024 அன்று இறுதி அறிக்கை தயார் செய்து, சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மேற்சொன்ன உதவி ஆய்வாளர் விசாரணையில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலானவர்கள் அவர்களது கு.வி.மு.ச பிரிவு 161(3) வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதுபோல் சொல்லியுள்ளார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

அ.சா.1 கொடுத்த தவறான புகாரை பெற்று சம்பவ இடம் செல்லாமலும், சாட்சிகளை விசாரிக்காமலும் தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கின் அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டன என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும், ஆஜரில்லா எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.